முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்

அ.வ.எண். 118 /2022

நாள். 20.04.2026 பி.வா.சா.1 – திரு. ரவிசந்திரன்

த/பெ - திரு. தங்கநாடார்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,

வாதி தரப்பு குறுக்கு விசாரணை

1) . உங்கள் சொந்த ஊர் மயிலாடி என்றால் சரிதான். நீங்கள் கற்சிலைகள் செய்வதற்குரிய கருங்கற்கள் விற்பனை செய்யும் தொழில் செய்து வருகிறீர்கள் என்றால் சரிதான். விவசாயமும் செய்து வருகிறேன். விவசாயம் எங்கு செய்து வருகிறீர்கள் என்றால் மயிலாடியில் செய்து வருகிறேன். மயிலாடியில் விவசாயம் செய்து வருவதாக சொல்லும் இடத்தின் சர்வே எண்.விஸ்தீரணம் தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு பிராதை படித்து பார்த்துள்ளீர்களா என்றால் படித்து பார்த்துள்ளேன். பிராதில் 3 தபசில் சொத்துக்கள் விவரம் சொல்லப்பட்டிருக்கிறது என்றால் சரிதான்.

2) 1ம் தபசில் சொத்து சர்வே எண். 1214/2 , அதில் 48 செண்டு காட்டப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. 2ம் தபசில் சொத்தாக சர்வே எண்.1201/2 A 1 ல் 1 ஏர் மற்றும் சர்வே எண். 1201/2 B 1 ல் 18 ஏர்ஸ் ஆக 19 ஏர்ஸ் என்றால் சரிதான். 3ம் தபசில் சொத்தாக 2ம் தபசில் சொத்தான 18 ஏர்ஸ் ல் 23 அடி அகல பாதை என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் அது தவறாக காண்பிக்கப்பட்டுள்ளது என்று சாட்சி கூறுகிறார். பிராது 1,2,3 சொத்துக்கள் சம்பந்தமாக ஒரு மாதிரி வரைபடம்

தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. உங்கள் முதல் விசாரணை வாக்குமூலம் மற்றும் எதிர் வழக்குரையில் அந்த மாதிரி வரைபடம் குறித்து மறுப்பு தெரிவிக்கப்படவில்லை என்றால் வழக்கறிஞரிடம் தெரிவித்தேன். ஆனால் முதல் விசாரணை மற்றும் எதிர் வழக்குரையில் அதை குறித்து தெரிவிக்கப்படவில்லை என்று சாட்சி கூறுகிறார்.

3) வழக்கு 1ம் தபசில் சொத்தான சர்வே எண். 1214 ல் மொத்த விஸ்தீரணம் 1 ஏக்கர் 2 செண்டு என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. 1 ஏக்கர் 2 செண்டில் தெற்கடைய 48 செண்டு சொத்தை பொறுத்து செல்ல நாடார் குமாரர்கள் குமாரசாமி நாடார், சோமசுந்தர நாடார், குட்டி நாடார் என்ற துரைப்பழம் நாடார் மற்றும் அண்ண பாண்டியன் ஆகியோர்கள் சேர்ந்து 06.12.1952 ல் கிரையம் பெற்றுள்ளார்கள் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. மேற்படி ஆவணம் வழக்கில் வா.சா-ஆ. 2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் அதை பற்றி எனக் கு தெரியாது. மேற்படி 4 நபர்களும் 1ம் தபசில் சொத்து தவிர வேறு என்ன என்ன சொத்துக்கள் கிரையம் பெற்றுள்ளார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. 48 செண்டான 1ம் தபசில் சொத்திற்கு கிழக்கு , மற்றும் மேற்கில் கால் உள்ளது என்றால் சரிதான். தெற்கே சர்வே எண். 1213 என்ற சொத்து உள்ளது என்றால் எனக்கு தெரியாது. நீங்கள் கிரையம் பெற்ற 2ம் தபசில் சர்வே எண். 1201/2 ல் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் எனக்கு தெரியாது.

4) சர்வே எண். 1201/2 ஆனது சர்வே எண். 1201/2A1 மற்றும் சர்வே எண். 1201/2B1 என்று உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். எந்த வருடத்தில் உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் நான் 2003 ம் வருடம் தான் கிரையம் பெற்றேன் எப்போது உட்பிரிவு செய்யப்பட்டது என்று எனக்கு தெரியாது. சர்வே எண். 1201/2 ல் மேலே சொன்ன செல்ல நாடார் குமாரர்கள் குமாரசாமி நாடார், சோமசுந்தர நாடார், குட்டி நாடார் என்ற துரைப்பழம் நாடார் மற்றும் அண்ண பாண்டியன் ஆகியோர்கள்சேர்ந்து 12.02.1955 அந்த ஆவணம் வா.சா.ஆ. 6 ஆக கிரையம் பெற்றுள்ளார்கள் என்றால் எனக்கு அதை பற்றி தெரியாது.

5) நான் சொத்து வாங்குவதற்கு முன்பு உள்ள பத்திரங்கள் பற்றி எனக்கு தெரியாது. மேற்படி 4 நபர்கள் சேர்ந்து யார் யார் முன்னிலையில் எந்த தேதி, எந்த மாத ,வருடத்தில் பாகப்பிரிவினை செய்துள்ளார்கள் என்றும் யார் யாருக்கு எந்த எந்தெந்த சொத்துக்கள் ஒதுக்கப்பட்டது என்ற விவரம் தெரியாது என்றால் சரிதான். நீங்கள் அன்னப்பாண்டி நாடார் என்பவரிடம் இருந்து பெற்றுள்ளீர்கள் என்றால் சரிதான். நீங்கள் கிரையம் பெற்ற போது அன்னபாண்டியனிடம் இருந்து என்ன என்ன ஆவணங்கள் வாங்குனீர்கள் என்றால் சொத்து பத்திரம் மற்றும் முன் பத்திரம் வா'ங்கினேன். சொத்து பத்திரம் எந்த தேதியில் யாரிடம் எவ்வளவு இடம் வாங்கப்பட்டது என்றால் அது எனக்கு தெரியாது.

6) அதுபோல் முன் பத்திரம் வாங்கியதான கூறுகிறீர்கள் எந்த தேதியில் யாரிடம் , எவ்வளவு இடம் வாங்கப்பட்டது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. நீங்கள் கூறும் முன் பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நீங்கள் கிரையம் பெறும் போது 2 ம் தபசில் சொத்தை பொறுத்து அன்னபாண்டியன் பெயரில் தனிப்பட்டா எதுவும் இருந்ததா என்றால் இருந்தது. அந்த பட்டா எண் தெரியுமா என்றால் தெரியாது. நீங்கள் அன்னபாண்டியன் பெயரில் உள்ள தனிப்பட்டா நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நீங்கள் சொத்தை கிரையம் வாங்குவதற்கு முன்பு வில்லங்க சான்று எதையும் பார்த்தீர்களா என்றால் பார்த்தேன்.

7) வில்லங்க சான்று எந்த வருடம் முதல் எந்த வருடம் வரை என்று பார்த்தீர்களா என்றால் எனக்கு ஞாபகமில்லை என்று சாட்சி கூறுகிறார். அவவாறு பார்வையிட்ட வில்லங்க சான்று கைவசம் உள்ளதா என்றால் அதை என் வீட்டில் பார்த்தால் தான் எனக்கு தெரியும். நீங்கள் பி. வா.சா.ஆ. 7 ஆக 2003 ம் ஆண்டு கிரைய ஆவணத்தின் முன் ஆவணமாக பணகுடி சார்பதிவாளர் அலுவலகத்தில் முன் பத்திரங்களாக ஆவணஎண்கள். 305/1955, 2598/1952, 1152/1970, 1808/1964, 722/1969 ஆகிய கிரைய பத்திரங்கள் படி மேலே சொன்ன அன்ன பாண்டியன் மற்றும் அவரது சகோதரர்கள் கிரையம் பெற்றதாகும்.

8) அன்ன பாண்டியன் தாயார் ராமலெட்சுமி அவர்கள் பெயரில் பணகுடி சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்கள். 459/1963, மற்றும் 443/1964 ஆகிய கிரைய பத்திரங்கள் மூலம் கிரையம் பெற்றுள்ளதாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணங்களை நீங்கள் கிரையம் பெறுவதற்கு முன்பு பார்த்துள்ளீர்களா என்றால் பார்க்கவில்லை. அந்த ஆவணங்களின் எந்தெந்த சர்வே எண்ணில் எவ்வளவு விஸ்தீரனம் காட்டப்பட்டுள்ளது என்ற விவரம் உங்களுக்கு தெரியாது என்றால் சரிதான். அதுபோல் பி.வா.சா.ஆ. 7 அவர்களுக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டது என்று காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

9) அந்த பூர்வீக சொத்துக்கள் என்பது செல்ல நாடார் வழியா , அல்லது அவர்கள் மனைவி' வழியா என்று தெரியாது என்றால் சரிதான். பி.வா.சா.7 ல் நாங்கள் வகையறாக்கள் , வாக்கால் பாகப்பிரிவினை செய்து கொ'ண்டதில் என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் எந்த தேதி , வருடத்தில் பாகப்பிரிவினை என்று காட்டப்படவில்லை என்றால் சரிதான்.

10) நீங்கள் கிரையம் பெறும் போது பி.வா.சா.ஆ. 7 ல் சர்வே எண். 1201/ 2 ல் 35 செண்டும், சர்வே எண். 1201/ 2 ஏ ல் 7 செண்டும், சர்வே எண். 1201/ 2 பி ல் 53 செண்டும் ஆக மொத்தம் 95 செண்டு கிரையம் பெற்றதாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

மேற்படி 3 சொத்துக்களும் அன்னபாண்டியன் என்பவருக்கு தனித்து பாத்தியப்பட்டது என்தற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

(குறுக்கு விசாரணை மற்றொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது)

ஓம்/-ஜெ. ஆன்ஸ்ராஜா
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வள்ளியூர்